செ.வெ.எண்: 48 நாள்:21.09.2021

# பத்திரிக்கை செய்தி

கோயம்புத்தூர் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு உதவி உபகரணங்கள் வழங்க மத்திய அரசின் பொதுத்துறை நிறுவனமான ALIMCO -ன் மூலம் RVY(Rashtriya Vayoshri Yojana) and ADIP (Assistance to Disabled Persons) ஆகிய திட்டத்தின் கீழ் முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு உதவி உபகரணங்கள் வழங்க மதிப்பீடு செய்வதற்கான சிறப்பு முகாம்கள் 22.09.2021 முதல் 05.10.2021 நடைபெற இருக்கிறது. முகாமில் மாற்றுத்திறனாளிகளுக்கு மூன்று சக்கர சைக்கிள், சக்கர நாற்காலி, செயற்கை கால், செயற்கைக் கை, காலிப்பர், ஊன்றுகோல், நவீன காதொலிக் கருவி, பார்வையற்றோருக்கான ப்ரெயிலி பொருட்கள், மனவளர்ச்சி குன்றிய மாணவ / மாணவியர்களுக்கு பயிற்சிப்பொருட்கள், தொழு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் மற்றும் பார்வையற்றோர்களுக்கும் அலைபேசி போன்ற உதவி உபகரணங்கள் பெறுவதற்கு தகுதியுடைய மாற்றுத்திறனாளிகளை தேர்வு செய்வதற்கான சிறப்பு முகாம்கள் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு நடைபெற உள்ளது. இம்முகாமில் கலந்து கொள்ளும் மாற்றுத்திறனாளிகள் மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை அசல் மற்றும் நகல், 2. ஆதார் அட்டை அசல் மற்றும் நகல் 3. குடும்ப அட்டை (அ) வாக்காளர் அட்டை அசல் மற்றும் நகல், 4. பாஸ்போர்ட் அளவு புகைப்படம் -4 ஆகிய சான்றுகளுடன் முகாம்களில் கலந்து கொண்டு பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

| வ.எண் | நாள் | நேரம் | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர் | இடம் |
|---|---|---|---|---|
| 1 | 22.09.2021 | காலை 10 மணி முதல் 1.00 மணி வரை | பொள்ளாச்சி | TELC ஆரம்பப்பள்ளி, வி.ஆர்.ஐ ரோடு, பொள்ளாச்சி |
| 2 | 23.09.2021 | காலை 10 மணி முதல் 1.00 மணி வரை | காரமடை | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி குட்டையூர், காரமடை ஒன்றியம், |
| 3 | 24.09.2021 | காலை 10 மணி முதல் 1.00 மணி வரை | கோயம்புத்தூர் மாநகராட்சி - | மாநகராட்சி ஆரம்பப்பள்ளி, ராமலிங்கம் காலணி கோயம்புத்தூர் |
| 4 | 27.09.2021 | காலை 10 மணி முதல் 1.00 மணி வரை | சர்க்கார் சாமக்குளம் | ஊராட்சி ஒன்றிய ஆரம்பப்பள்ளி சர்க்கார் சாமக்குளம், |
| 5 | 28.09.2021 | காலை 10 மணி முதல் 1.00 மணி வரை | சூலூர் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி எஸ்.எல்.வி நகர், புதிய பேருந்து நிலையம் அருகில் சூலூர். |
| 6 | 29.09.2021 | காலை 10 மணி முதல் 1.00 மணி வரை | மதுக்கரை | ஊராட்சி ஒன்றிய ஆரம்பப்பள்ளி, மதுக்கரை மார்க்கெட், மதுக்கரை |
| 7 | 30.09.2021 | காலை 10 மணி முதல் 1.00 மணி வரை | தொண்டாமுத்தூர் | ஊராட்சி ஒன்றிய ஆரம்பப்பள்ளி, தொண்டாமுத்தூர் |
| 8 | 01.10.2021 | காலை 10 மணி முதல் 1.00 மணி வரை | கிணத்துக்கடவு | ஊராட்சி ஒன்றிய ஆரம்பப்பள்ளி, கிணத்துக்கடவு |
| 9 | 04.10.2021 | காலை 10 மணி முதல் 1.00 மணி வரை | சுல்த்தான்பேட்டை | ஊராட்சி ஒன்றிய ஆரம்பப்பள்ளி, சுல்தான் பேட்டை, |
| 10 | 05.10.2021 | காலை 10 மணி முதல் 1.00 மணி வரை | வால்பாறை | ஊராட்சி ஒன்றிய ஆரம்பப்பள்ளி, வால்பாறை |

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கோயம்புத்தூர்.**